G.C.E. Advance Level

# எதிர்பார்க்கை வினாக்களுடன் விடைகளும்

# 2020

# ISLAM

## இஸ்லாம்

k; n tw;v;pf; F t op

## பகுதி – 01

01. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது
   1. ''அல் இபாதத்'' என்பது அல்லாஹ்வுக்காக அடியான் நிறைவேற்றும் வணக்கமாகும்
   2. ''அத் தப்லீக்'' என்பது ரஸுல்மார்களின் வாஜிபான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
   3. ''அல் ஹய்யு'' என்பது அல்லாஹ்வுக்குரிய வாஹிபான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
   4. ''அல் பதானத்'' என்பது நபிமார்களுக்குரிய முஸ்தஹீலான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
   5. ''மு.்.ஜிஸாத்'' என்பது நபிமார்களின் காண்பிக்கும் அற்புதங்களைக் குறிக்கும்

02. ''யா அல்லாஹ், இவர்களில் யாரை அதிகம் நேசிக்கிறாயோ அவரைக் கொண்டு இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்வாயாக'' என நபி (ஸல்) அவர்கள் பிராத்தனை செய்தார்கள். இங்கு ''இவர்களில்'' எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்
   1. அம்ர் இப்னு ஆஸ் - காலித் இப்னு வலீத்
   2. அம்ர் இப்னு ஹிஷாம் - உமர் இப்னு கத்தாப்
   3. உமர் இப்னு கத்தாப் - அம்ர இப்னு ஜஹ்ம்
   4. அம்ர் இப்னு ஹிஷாம் - அம்ர் இப்னுல் ஆஸ்
   5. உமர் இப்னு அப்துல் அஸீஸ் - உமர் இப்னு கத்தாப்

03. நீர் வழிந்தோடும் இலங்கையின் இயற்கை வனப்பை கண்ட அரேபியர் அதற்கு ஒரு பெயர் சூட்டினர். அது
   1. ஸரந்தீப்
   2. துப்ரபேன்
   3. அஸ் - ஸைலான்
   4. சிலோன்
   5. அல்ஜஸீரா

04. ஒரு முஜ்தஹித் குழுவினர், குறித்த பிரச்சினை தொடர்பாக ஒரு கருத்தை முன்வைக்க அதனை வேறு எந்த முஜ்தஹித்களும் மறுக்காமலும் கருத்து வெளியிடாமலும் இருக்கும் நிலையில் தோன்றுவது
   1. இஜ்மா ஸரிஹ்
   2. இஜ்மா ஸுகூத்தி
   3. இஜ்மா அக்ஸரிய்யா
   4. இஜ்மா முரக்கப்
   5. இஜ்மா கௌலி

05. தர்தீப் திலாவத், தர்தீப் நுஸூல் என்பனகுறிப்பன முறையே அல்குர்ஆன்
   1. அருளப்பட்ட முறையையும் ஓதப்படும் முறையையும் ஆகும்
   2. ஓதப்படும் முறையையும் அருளப்பட்ட முறையையும் ஆகும்
   3. அருளப்பட்ட முறையையும் எழுதப்பட்ட முறையையும் ஆகும்
   4. தொகுக்கப்பட்ட முறையையும் ஓதப்பட்ட முறையையும் ஆகும்
   5. ஒழுங்குபடுத்தப்பட்ட முறையையும்ஓதப்படும் முறையையும் ஆகும்

06 – 10 வரையுள்ள வினாக்களுலுள்ள சொற்களில் இரண்டு சொற்கள் மற்றிரு சொற்களுடன் ஏதாவதொரு வகையில் தொடர்பினைக் கொண்டுள்ளன. அவ்வாறான தொடர்பினைக் கொண்டிராத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்க.

06. 1. ஆஸ்மா (ரழி) 2. ஆயிஷா (ரழி) 3. பாத்திமா (ரழி)

gapw; rpAk; Kaw; n w;wpf; F tep

4. ஹஸன் (ரழி)     5. ஹுஸைன் (ரழி)

07. 1. இப்ராஹீம் (அலை)     2. ஸுலைமான் (அலை)     3. யூஸுப் (அலை)
4. ஹாஜர்     5. பல்கீஸ்

08. 1. தஹாவி     2. ஷாபிஈ     3. ஹம்பலி
4. ஹம்மாத்     5. நு.்.மான்

09. 1.ஸூரா கஹ்பு     2. ஸூரா பாதிஹா     3. ஸூரா பகரா
4. ஸூரா பலக்     5. ஸூரா நாஸ்

10. 1. பித்அத்     2. மு.்.தஸிலா     3. இஸ்னா அஷ்அரிய்ா
4. வுாஜிப்     5. ஹராம்

11. இஸ்லாமிய வரலாற்றில் பல சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றன. அவற்றுள் கவாரிஜ் எனப்படுவோர்
   1. அஹ்லுல்பைத்களை ஆதரிப்போர்
   2. கலீபா உஸ்மான் (ரழி) மீது குற்றம் சுமத்தியோர்
   3. ஜமல் யுத்த்தில் பங்கு கொண்டோர்
   4. அபூபக்கர் (ரழி) அவர்களன் காலத்தில் மதம் மாறியோர்
   5. ஸிப்பீன் யுத்தத்தின் போது கருத்து முரண்பாடு கொண்டு அலி (ரழி) அவர்களின் அணியிலிருந்து வெளியேறியோர்

12. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்பான முக்கிய தகவல்களைத் தரும் நூல்களாவன
   1. ஸஹீஹுல் புஹாரி, ரியாளுஸ் ஸாலஹீன்
   2. அஜாஇபுல் ஹிந்த், புதூஹுல் புல்தான்
   3. தாரீஹுல் கபீர், தாரீஹுர் ருஸுல் வல்முலூக்
   4. கிதாபுல் உம்மு, அஹ்காமுஸ் ஸுல்தானியா
   5. புதூஹுல் புல்தான், மிஷ்காதுல் மஸாபீஹ்

13. அல்குர்ஆனின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பின்வருவனவற்றில் எதனை முதன்மைக் காரணியாகக் குறிப்பிடுவீர்
   1. அருளப்பட்ட காலத்திலே எழுத்திலும் மனனத்திலும் பாதுகாக்கப்பட்டமை
   2. அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்டமை
   3. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்டமை
   4. அல்குர்ஆன் முழுமையாக மனனமிடப்பட்டிருந்தமை
   5. அல்குர்ஆனின் பாதுகாப்பை அல்லாஹ் உறுதிப்படுத்தியமை

14. இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் முடிவுகளை ஆய்வின்றி பின்பற்றுவது
   1. இஜ்திஹாத்
   2. தக்லீத்
   3. இத்திபாஉ
   4. மக்ரூஹ்
   5. முபாஹ்

15. ரமழான் நோன்பினால் எதிர்பார்க்கப்படும் பயன்களில் பிரதானமானது
   1. உடல், உள கட்டுப்பாடு
   2. ஏழைகளின் கஷ்டங்களை உணர்தல்
   3. உலக முஸ்லிம்களின் ஐக்கியத்தை உணர்தல்
   4. விழித்திருந்து அமல் செய்தல்
   5. உடல் ஆரோக்கியம் பெறுதல்

gapw; rpAk; Kaw; rpAk; n tw;wpf; F t op

16. தாம் வாழும் நாட்டின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காகவும் உள்நாட்டு மோதலைத் தவிர்ப்பதற்காகவும் நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம்
   1. ஹுதைபியா உடன்படிக்கை
   2. ஹில்புல் புழூல் உடன்படிக்கை
   3. மதீனா சாசனம்
   4. முதலாம் அகபா உடன்படிக்கை
   5. இரண்டாம் அகபா உடன்படிக்கை

17. மரணித்த ஒருவரின் சொத்து தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளில் ஒழுங்கு முறையைக் காட்டும் தொகுதி
   1. ஜனனாஸாவின் செலவினங்களை மேற்கொள்ளல், அவரது கடன்களை அடைத்தல், அவரது வஸியத்தை நிறைவேற்றல், வாரிவுகளிடையே சொத்துக்களைப் பங்கிடல்
   2. அவரது கடன்களை அடைத்தல், வஸியத்தை நிறைவேற்றல், ஜனாஸாவின் செலவினங்களை மேற்கொள்ளல், வாரிகளிடையே சொத்துக்களைப் பங்கிடல்
   3. வஸியத்தை நிறைவேற்றல், வாரிசுகளிடையே சொத்துக்களைப் பங்கிடல், ஜனாஸாவின் செலவினங்களை மேற்கொள்ளல், கடன்களை நிறைவேற்றல்
   4. கபனிடுதல், கடன்களை அடைத்தல், வஸியத்தை நிவைவேற்றல், தர்மம் செய்தல்
   5. கபனிடுதல், கடன்களை அடைத்தல், அடக்கம் செய்தல், தர்மம் செய்தல்

18. பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைக் குறிக்கும் கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. ஆவற்றுள் மிகப் பொருத்தமான கூற்றுக்களை உள்ளடக்கிய சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க.
   A. பெண்களுக்கான உரிமைகள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டின் மூலமும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன.
   B. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இத்தாக் காலம் நான்கு மாதங்களும் பத்து நாட்களுமாகும்.
   C. மனைவிக்குரிய நபகாவை வழங்குவது கணவனது கடமையாகும்
   D. மாதவிடாய் காலத்தில் தன் மனைவியை விவாகரத்துச் செய்வது தலாக் அல் பிதஈயில் அடங்கும் ஒரு பெண் இமாமாக நின்று தொழுகை நடாத்தும் போது அவரைப் பின் தொடர்ந்து ஆண்கள் மஃமூம்களாகத் தொழ முடியும்
   E. குடும்ப விவகாரங்களில் தலைமைத்துவம் ஆண்களுக்குரியதாகும்
   F. பெண்கள் வீட்டிற்கு வெளியே நடமாடும் போது வீட்டினுள்ளே இருக்கும் போதும் கடைபிடித்து வர வேண்டியஅ வ்ரத் வரையறைகள் ஒன்றேயாகும்

   1. ABED  2. ACDE  3. ADFE  4. CBAG  5. CDFG

19. வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் சிந்தனை மேற்கத்திய சிந்தனையிலிருந்து வேறுபடும் பாங்கு
   1. தௌஹீத் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை
   2. பயன்பாட்டு வாதத்தை அடிப்படையாகக் கொண்டமை
   3. உலக வாழ்வை அடிப்படையாகக் கொண்டமை
   4. மறுபிறப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை
   5. துறவறக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை

20. இன்று இலங்கை முஸ்லிம் சமூகத்தில் விவாகரத்து அதிகரிப்பதற்கான பிரதான காரணம்
   1. இஸ்லாமிய குடும்ப வாழ்வு பற்றிய அறிவின்மை
   2. தலாக்கை இலகுவாக பெற்றுக் கொள்ள முடிகின்றமை
   3. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகரித்து வருகின்றமை
   4. தொடர்பூடகங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளமை
   5. ஷரீஅத்தில் தலாக் அனுமதிக்கப்பட்டுள்ளமை

21. ஏனைய தொழுகைகளில் இடம்பெறாததும் கிரகணத் தொழுகையில் மாத்திரம் இடம்பெறுவதுமான அம்சம்
   1. குத்பாவும் தொழுகையுமாகும்
   2. குத்பாவும் குனூத்துமாகும்
   3. இரண்டு ரக்அத்துக்களும் நான்கு ருகூஉகளுமாகும்
   4. பன்னிரன்டு தக்பீர்களும் இரண்டு ரக்அத்துக்களாகும்

gapw; rpAk; Kaw; rpAk;rtwpf; F top

5. நான்கு தக்பீர்களும் ஜமாஅத் தொழுகையுமாகும்

22. தப்ஹீமுல் குர்ஆன் என்ற தப்ஸீரை எழுதிய ஆசிரியர்
1. ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்)
2. இப்னு கஸீர் (ரஹ்)
3. இமாம் ராஸி (ரஹ்)
4. ரஷீத் ரிழா (ரஹ்)
5. அபுல் அ∴லா மௌதூதி (ரஹ்)

23. அல்குர்ஆனின் வசனங்களுக்கு இ∴ராபுகளையும், ஒற்றை இரட்டைப் புள்ளிகளையும் இட்ரோட்ரின் சரியான தொகுதி
1. அபூ ஹுரைரா (ரழி), அபூ தர்தா (ரழி)
2. ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுப், யூஸுப் ஜிஸ்லி
3. அபுல் அஸ்வதுஸ் ஸவ்ரிய்யா, நஸ்ர் இப்னு ஆஸிம்
4. ஸைத் இப்னு ஸாபித் (ரழி), அபூதர் அல் கிப்பாரி (ரழி)
5. அபூ ஐயூபுல் அன்ஸாரி (ரழி), அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)

24. பின்வவரும் விடயங்களில் காதியானிகளது கொள்கையில் இடம்பெறாதது
1. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பவர் மீர்ஸ் குலாமே
2. காதியானிகள் அல்லாத அனைவரும் நல்லெண்ணம் கொள்ளத்தக்கோர் ஆவார்
3. வஹி அருளப்படுவது முற்றுப் பெறவில்லை
4. இஸ்லாத்தில் ஜிஹாத் தொடர்ந்து நீடிப்பதில்லை
5. கத்முன் நுபுவ்வத் என்பது நபித்துவ முத்திரையாகும்.

25. ஆன்மீக வாழ்வைப் பாதிக்கும் அம்சங்கள்
A. அல் ஹஸத்
B. அல் கித்ப்
C. அல் கத்ல்
D. தஸ்கியா
E. அல் கிப்ர்

1. ABCD  2. ABDE  3. ACDE  4. BCDE  5. ABCE

- 26 தொடக்கம் 29 வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் X,Y என்னும் நிரல்களின் கீழ் சில தகல்கள் தரப்பட்டுள்ளன. X நிரலிலுள்ளவை லு நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுடன் சரியாகத் தொடர்புபடும் போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவு செய்க

26.

| X | Y |
|---|---|
| 1. வாஜிபாத் | A. உலூஹிய்யத் |
| 2. ருபூபிய்யத் | B. வஹி கைரு மத்லூவ் |
| 3. ஷிர்குல் ஜலி | C. குப்ர் |
| 4. வஹி மத்லூவ் | D. முஸ்தஹீலாத் |
| 5. ஈமான் | E. ஷிர்குல் கபீ |

1. ACBED  2. ABCED  3. ECBAD  4. AEBCD  5. DAEBC

27.

| | |
|---|---|
| 1. மஹப்பத் | A. சுய விசாரணை |
| 2. முஹாஸபா | B. பற்றற்ற வாழ்வு |
| 3. வரஉ | C. நேசம் |
| 4. ஸுஹ்த் | D. விசுவாசப் பிரமாணம் |
| 5. பைஅத் | E. பேணுதல் |

1. CABED  2. CAEBD  3. CBAED  4. CBEAD  5. CEABD

28.

| | |
|---|---|
| 1. ஈமானுக்கும் அமலுக்கும் தொடர்பு கிடையாது | A. மு∴தஸிலா |
| 2. அல்குர்ஆன் படைக்கப்பட்டது | B. ஷீஆ |

gapw; rpAk; Kav;mAk; n tw;wpf; F top

3. அலி (ரழி) அவர்கள் வார்பானவர்கள் — C. முர்ஜிஆ
4. ஷீஆக்களில் மிதவாதிகள் — D. அஷ்அரி
5. ஆல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் — E. ஸைதிகள்

1. ABCDE  2. EDCBA  3. CAEDB  4. CABED  5. EABCD

29.

| | |
|---|---|
| 1. இமாம் இப்னு மாஜா | A. முஹம்மத் இப்னு இஸ்மாஈல் |
| 2. இமாம் திர்மிதி | B. நைஷாபூரில் பிறந்தார் |
| 3. இமாம் முஸ்லிம் | C. பிக்ஹ் அடிப்படையில் முதல் தரமானது |
| 4. இமாம் புஹாரி | D. பிறப்பு ஹி – 209 |
| 5. ஸுனன் அபூதாவூத் | E. வபாத் ஹிஜ்ரி – 279 |

1. ABDEC  2. CBED  3. DCABE  4. DEBAC  5. DEABC

30. அல்குர்ஆனும் இஸ்லாமும் நபியவர்களது காலத்திலேயே தோற்றம் பெற்றது என்பதற்கும் அவரது காலத்திலேயே முழுமைப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கும் மிகவும் பொருத்தமான கூற்றாக அமைவது
1. நுபியவர்கள் இறுதித் தூதராகக் காணப்படுகின்றமை
2. இவை பற்றிய அல்குர்ஆனின் கட்டளை
3. இஸ்லாம் ஒரு சர்வதேச மார்க்கமாக காணப்படுகின்றமை
4. இது பற்றி ஹதீஸில் தெளிவுபடுத்தப்படுகின்றமை
5. முன்னைய வேதங்கள் திரிபுகளுக்குட்பட்டமை

31. அபூபக்கர் (ரழி) அவர்கள் தமது ஆட்சியில் மேற்கொண்ட நடவடிக்கைகளுள் அடங்காதது
1. ஸகாத் கொடுக்க மறுத்தோருக்கு எதிரான போராட்டம்
2. மஜ்லிஸுஷ் ஷுரா எனும் ஆலோசனை சபை உருவாக்கப்பட்டமை
3. குர்ஆன் தொகுக்கப்பட்டமை
4. நபியவர்கள் தயார் செய்து வைத்த உஸாமா (ரழி) அவர்களது படையை சிரியாவுக்கு அனுப்பியமை
5. மதம் மாறியோர், போலி நபிமார்களுக்கு எதிரான முயற்சிகள்

32. ஹஜ், உம்ரா பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஆவற்றுள் ஹஜ்ஜுடன் தொடர்பான கிரியைகளை விளக்கும் தொகுதி

A. எந்த மாதத்திலும் நிறைவேற்றலாம்
B. அரபாவில் தரிக்க வேண்டும்
C. தவாப் செய்தல்
D. ஸஈஇடம் பெறுதல் வேண்டும்
E. குறிப்பிட்ட மாதத்தில் நிறைவேற்ற வேண்டும்
F. மினா, முஸ்தலிபா கிரியைகள் இல்லை
G. இஹ்ராம் கலையும் வரை துர்வார்த்தை பேசலாகாது

1. BDFG  2. ABCD  3. CDEF  4. BCDE  5. ADEF

33. ஆன்மீக எழுச்சிக்குப் பங்களித்த இயக்கப் பிரிவினர்கள்
1. குாரிஜீ, மு∴தஸிலா, கதரிய்யா
2. அஷ்அரிய்யா, மாதுரிதி, மு∴தஸிலா
3. காதிரிய்யா, ஷாதுலிய்யா, ஜிஸ்திய்யா
4. அஷ்அரிய்யா, நக்ஷபந்தி, தஹாவி
5. ஷுஹரவர்திய்யா, தஹாவிய்யா, ஜபரிய்யா

34. கி.பி. 16 ம் நூற்றாண்டுகளில் கரையோரப் பகுதிகளில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களை துரத்தியடித்தவர்
1. ஆங்கிலேயர்
2. போர்த்துக்கேயர்
3. ஒல்லாந்தர்
4. சிங்களவர்
5. பறங்கியர்

gapw; rpAk; Kaw; rpAk n tw;wpf; F t op

35. கதரிய்யா. ஜபரிய்யா ஆகிய இரு பிரிவினர்களது சிந்தனைகளை உள்ளடக்கிய கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஆவற்றுள் ஜபரிய்யாக்களது சிந்தனையை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி

A. மனிதன் பூரண செயல் சுதந்திரமுள்ளவன்
B. மனிதன் சுயமாக சிந்தித்து எதனையும் செய்ய முடியாது
C. அல்லாஹ் நலவை மட்டும் நாடுகிறான்
D. மனிதனுடைய செயல்கள் அனைத்தையும் அல்லாஹ் படைக்கிறான்
E. மனிதனது இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு என்பவற்றுக்கு அவனே காரணமாகின்றான்
F. எல்லா செயல்களும் நடைபெற்று முடிந்ததன் பின்னரே அல்லாஹ் அறிகிறான்

1. BF 2. DF 3. AD 4. BD 5. CE

36. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் நிறைவேற்ற வேண்டிய இபாதத், கிலாபத், இமாரத் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன. ஆவற்றுள் கிலாபத் பணிகளை உள்ளடக்கிய தொகுதி

A. காடுகளை அழியாது பாதுகாத்தல்
B. இறைச் சட்டங்களை உலகில் நடைமுறைப்படுத்தல்
C. கடமைகளை நிறைவேற்றல்
D. மனித உரிமைகளை நிறைவேற்றல்
E. சுற்றாடலை சுத்தமானக வைத்திருத்தல்
F. பெற்றோருக்குரிய கடமைகளை நிறைவேற்றல்

1. AB 2. BD 3. BF 4. CD 5. DE

37. நஸ்ர் இப்னு ஆஸிம் என்பவர் இஸ்லாமிய வரலாற்றில் சிறப்பிடம் பெறக் காரணமாக அமைந்தது

1. அல்குர்ஆன் வசனங்களுக்கு உயிர்க்குறிகளை இட்டமை
2. ஹதீஸ்களை எழுத்துருவில் பாதுகாத்தமை
3. அல்குர்ஆனை தொகுக்கும் பணியில் ஈடுபட்டமை
4. நபி கால போர்களில் கலந்து கொண்டமை
5. அல்குர்ஆன் வசனங்களுக்கு ஒற்றை இரட்டை புள்ளிகளை இட்டமை

38. திம்மிக்கள் பற்றிய கூற்றுக்களின் சரியான தொகுதி

A. இஸ்லாமிய அரசுக்கு ஜிஸ்யா வரி செலுத்துதல்
B. இவர்களின் உரிமைகளை வழங்குவது இஸ்லாமிய அரசின் கடமை
C. திம்மிக்கள் இரத்தமும், முஸ்லிம்மின் இரத்தமும் சமமானது
D. இவர்கள் இஸ்லாமிய அரசுடன் போராடுவர்
E. இவர்களுக்கான நீதியுரிமையை இஸ்லாமிய அரசு புறக்கணிக்கும்
F. திம்மிக்கள் முஸ்லிம்களுடன் நல்லுறவு பாராட்ட வேண்டும்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ABCF 5. CDEF

39. ''ஸவ்முல் கப்பாரா'' எனப்படுவது

1. ஷஃபான் மாதத்தில் 15 வது நாள் நிறைவேற்றப்படும் நோன்பு
2. ரமழான் மாதத்தில் 27 ந் திகதி நிறைவேற்றும் நோன்பு
3. நேர்ச்சைக்காக நிறைவேற்றப்படும் நோன்பு
4. இபாதத்துக்களின் போது விடுபட்ட தவறுகளுக்குத் தண்டனையாக நிறைவேற்றப்படும் நோன்பு
5. ஷவ்வால் ஆறு நோன்புகள்

40. பக்தாத்தில் விண்வெளி ஆய்வு நிலையமொன்றை நிறுவிய வானியல் அறிஞர்

1. ஸைத் இப்னு அலி
2. அல் குவாரஸ்மி
3. அல் ஜாஹிஸ்
4. இப்னு பிர்னாஸ்
5. இப்னு ஜௌஸி

41. தக்வாவை ஏற்படுத்தும் அமல்களில் ஒன்றாக அல்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடும் ஓர் இபாதத்

1. தர்மம் வழங்குதல்
2. தொழுகையை நிறைவேற்றல்
3. நோன்பு நோற்றல்
4. பள்ளிவாசல்களை நிர்மாணித்தல்

gapw; pAk; Kaw; pAk; n tw;wpf;F t op

5. கல்விக் கூடங்களை அமைத்தல்

42. பௌதீக உலகத்தினாலும் ஐம்புலன்களினாலும் விளங்கிக் கொள்ள முடியாத இஸ்லாமிய அகீதாவின் பிரிவுகளை விளக்கும் பகுதியை அழைப்பது
1. அல் இலாஹிய்யாத்
2. அந்நுவவ்வாத்
3. அர்ரூஹானிய்யாத்
4. அஸ்லம் இய்யத்
5. அர்ரிஸாலத்

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலம் கூற்றைத் தெளிவாக விளக்குகிறது |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 43. ஓராபி பாஷா எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டவர் | ஓராபி பாஷாவின் தொடர்பு இஸ்லாமிய எழுச்சி, இலங்கை முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் என்பவற்றுக்கு எம்.சீ சித்திலெப்பைக்கு பெரிதும் துணை நின்றது |
| 44. உமர் இப்னு அஸீஸ் (ரஹ்) அவர்கள் கலீபதுஸ்ஸாலிஹ் என்று அழைக்கப்பட்டார்கள் | உமையாக்களது வீழ்ச்சிக்கு உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) காரணமாக இருந்துள்ளார் |
| 45. யஸீத் பின் முஅவியாவின் ஆதாரவாளர்களினால் கர்பலாவில் ஹஸன் (ரழி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் | தனக்குப் பின்னர் கிலாபத்தை ஹுஸைன் (ரழி) அவர்களிடம் ஒப்படைத்தாக முஅவியா (ரழி) உறுதிப்படுத்தினார் |
| 46. மஃஸூம் எனும் பண்பு நபிமார்களுக்குரியதென அஹ்லுஸ்ஸுன்னா பிரிவினர் குறிப்பிடுவர் | ஷீஆப் பிரிவினர் பிற்பட்ட காலப்பிரிவில் அரசியல் ரீதியாக எழுச்சி பெற்றுள்ளனர் |
| 47. நெசவுத் தொழிலை வளர்க்க இந்தியாவிலிருந்து முஸ்லிம்களால் அழைத்து வரப்பட்டோர் இலங்கையில் அத்தொழிலை வளர்த்துள்ளனர் | போர்த்துக்கேயர் இலங்கையில் முஸ்லிகள் சுதந்திரத்துடன் செயற்பட ஆரம்பித்துள்ளனர் |
| 48. ஒருவர் மாதவிடாய் காலத்தில் தனது மனைவியை தலாக் செய்வது தலாக் ஸுன்னி எனப்படும் | மூன்று தலாக்கையும் ஒரே தடவையில் கூற ஷரீஆ அனுமதித்துள்ளது |
| 49. மணமகன் கைகூலி பெறுவது ஷரீஆவில் தடுக்கப்பட்டதன்று | வலீமா என்பது மணமகன், மணமகள் தரப்பிலிருந்து பெறப்படும் பணத்தினால் இடம்பெறுதல் வேண்டும் |
| 50. ஹதீஸ் குத்ஸியின் கருத்துக்கள் நபி (ஸல்) அவர்களால் குறிப்பிடப்பட்டவையாகும் | முதவாதிர் ஹதீஸ்கள் ஆஹாதை விட தரம் கூடியவையாகும் |

## பகுதி – I

1) பின்வரும் தலைப்புக்கள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.

i. மஸ்லஹா முர்சலா

ii. கைத் தொழில்

iii. உடை

iv. கூட்டுப் பொறுப்பு

2) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. மஹப்பதுர் றசூல்
   ii. அந் நாஸிக் வல் மன்சூக்
   iii. இல்ஹாத்தும் அதன் தாக்கமும்
   iv. தஸவ்வுப் கலை

3) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. தலாக்
   ii. கழா கத்ர்
   iii. நோன்பு
   iv. பெண்கள்

## பகுதி – II

4) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. இ∴ஜாசுல் குர்ஆன்
   ii. குர்ஆன் மீது எமக்குள்ள கடமைகள்.

5) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. மௌழூவான ஹதீஸ்களின் தோற்றத்திற்கான காரணிகளும் , ஸஹிஹான ஹதீஸ்களை இணங்காணும் வழிகளும்
   ii. இஜ்மா அல்லது கியாஸ் பற்றி விளக்கி அது ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களுடன் விளக்குக

6) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. கனவன் மனைவி அல்லது பெற்றார் பிள்ளைகள் உரிமை, கடமைகள் பற்றி விளக்குக
   ii. பலதாரம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

7) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

   i. சமூகப் பணரமைப்பில் பள்ளிவாசல்களின் பங்கு பற்றி விளக்குக.
   ii. ஜீவகாருன்யம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

8) பின்வரும் தலைப்புக்களை விளக்குக

   i. மாற்று மதத்தவர்களுடனான உறவு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றி விளக்குக
   ii. ஜிஹாத் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்கி அது பற்றிய தப்பபிப்பிராயங்களைக் குறிப்பட்டு அவை பிழையானவை என்பதை நிறுவுக

9) பின்வருவனவற்றை விளக்குக

   i. ஹறாம் ஹலால் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றி விளக்குக
   ii. பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்.

gapw; rpAk; Kaw; rpAk; nrwpf; F top

10) பின்வரும் தலைப்புக்களை விளக்குக.

i. இஸ்லாம் அனுமதித்த பொருளாதார முறைகளை விளக்குக

ii. இமாம் முஸ்லிம் அல்லது இமாம் சாபிஈ அவர்களின் பங்களிப்புக்கள் பற்றி விளக்குக.

# விடையமைப்பு

## பகுதி – ஐ

**கேள்வி இல : 01**

### i. மஸ்லஹா முர்சலா

- ஷரீஅத் மனித நலன் காப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இஸ்திஸ்லாஹ் என்பதன் கருத்து சமூக நலனை ஆதாரமாகக் கொள்வதாகும். குர்ஆன் ஸுன்னாவின் போதனைகள் குறித்த ஒரு விடயம் தொடர்பாக தீர்வு சொல்லாத போது மனித நலநன கருத்திற் கொண்டு தீர்வு பெறுவதனையே இது குறிக்கும்.
- மக்களது அத்தியவசியத் தேவைகள், சாதாரணத் தேவைகள், மேலதிகத் தேவைகள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் மக்கள் நலன் காத்தலையே இது குறிக்கும்.
- மஸ்லஹா அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்கு உதாரணங்களாக அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டமை, சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டமை, நாணயங்கள் வெளியிடப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- மஸ்லஹா ஒரு சட்ட மூலாதாலம் என்பதற்கான ஆதாரங்கள்
  - ஷரீஅத் மக்களது சிரமங்களை நீக்கி அவர்களுக்கு நன்மை பயப்பதனையே நோக்காகக் கொண்டிருக்கின்றது என்ற வகையில் புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்கு மனித நலன்களை உத்தேசித்து தீர்வு வழங்குவது ஷரீஆவின் நோக்கத்துக்கு இணைந்ததாக அமைந்துள்ளது.
  - ஸஹாபாக்கள் மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளார்கள். அபூபக்கர் (ரழி) தனக்குப் பின் உமர் (ரழி) அவர்களை அடுத்த கலீபாவாக அறிவித்தமை, குர்ஆன் திரட்டப்பட்டமை போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- மஸ்லஹா முர்ஸலா அடிப்படையில் தீர்வு பெறுவதற்கு அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகள் ஆவன
  1. மஸ்லஹா ∴ நலன் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். அது பிரம்மையின் அடிப்படையில் அமைந்ததாக இருக்க கூடாது.
  2. மஸ்லஹா ∴ நலன் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.
  3. மஸ்லஹா ∴ நலன் ஷரீஆவின் நோக்கங்களுக்கு இயந்ததாக இருக்க வேண்டும்.
  4. ஒரு கஷ்டத்தை நீக்குவதாக அல்லது ஒரு நலனைக் காப்பதாக மஸ்லஹா அமைதல் வேண்டும்

### ii. கைத் தொழில்

- நபி (ஸல்) அவர்களிடம் தொழில்மளில் சிறந்தது எதுவென வினவியபோது ‘‘கைத்தொழிலும் பொய் கலவாத வர்த்தகமும்’’ (அஹ்மத்) எனப் பதிலளித்தார்கள்.
- நபியினால் புகழ்ந்து கூறப்பட்ட ஒரு பொருளீட்டல் நடவடிக்கையாக இதுவுள்ளது. அல்குர்ஆனிலும் கைத்தொழில் துறைக்கான வழிகாட்டல்கள் அதன் தேவை பற்றியெல்லாம் விபரிக்கப்பட்டுள்ளன. நபிமார்கள் எவ்வாறு கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற விளக்கங்கள் எல்லாம் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நடைமுறை உலகில் இரும்பை மையமாக வைத்து பாரிய கைத்தொழில் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அது வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்வதற்கான எல்லா வழிகளிலும் பயண்படுத்துதைக் காணலாம் ஆல்குர்ஆனில் .பல்வேறு இடங்களில் இரும்பைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஸுறாவின் பெயரே ‘அல்ஹதீத்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் முறையும் குர்ஆனில் விபரிக்கப்பட்டுள்ளது.
- ‘‘இரும்பை நாமே இறக்கினோம். ஆதில் கடுமையான சக்தியும் மனிதருக்குப் பல வகைப் பயனும் இருக்கின்றது.’’ (57.25)
- ‘‘மேலும் நாம் அவருக்கு இரும்பை மிருதுவாக்கித் தந்தோம்.’’ (34:10-11)
- ‘‘இன்னும் நீங்கள் போரிடும்போது உங்களை பாதுகாத்து கொள்வதற்கான கவசங்கள் செய்வதை அவருக்கு நாம் கற்றுக் கொடுத்தோம் எனவே இவற்றுக்கெல்லாம் நீங்கள நன்றி செலுத்துபவர்களாக இருக்கீரிர்களா?’’ (21:80)
- நபி தாவூத் (அலை) அவர்கள் தொடர்புபடுத்தி வரும் மேற்படி குர்ஆன் வசனங்கள் இரும்போடு தொடர்புடைய கைத்தொழில் துறைகளில் அவர் ஈடுபட்டு வந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.
- அல்லாஹ்வின் தூதர் நபி நுஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டும் வேலையில் ஈடுபடுத்தப்பாட்டார்கள். ஆல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாகாப்புப் பெறுவதற்காக இது மேற்கொள்ளப்பட்டது இன்று கப்பல் போக்குவரத்தே பண்டங்கள் நாடுகளுக்கிடையில் ஏற்று இறக்குமதி செய்ய உதவுகின்றது. கப்பல் கட்டும் தொழில் துறை இன்று விருத்தியடைந்துள்ளது. இதனை அல்குர்ஆன் பின்வரும் அடிப்படையில் விபரிக்கின்றது.
- ‘‘இன்னும் மலைகளைப் போல் கடலில் செல்பவையும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும்.’’
- நபிமார்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உழைப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாற்றினுடாக காண முடிகின்றது.
- தாவூத் (அலை) அவர்கள் இரும்பாயுதங்கள் செய்வதில் ஈடுபட்டது போல். ஸகரிய்யா (அலை) அவர்கள் தச்சுத ்தொழிலில ் ஈடுபட்டுவந்துள்ளார்கள்.
- இஸ்லாம் ஈருலக வாழ்வையும் வளப்படுத்துகின்ற கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவதையே அனுமதிக்கின்றது. மாற்றமாக அகீதாவை சமூக. வாழ்வை ஒழுக்கத்தை. பண்பாட்டை சீர்குலைக்கும் எந்தக் கைத்தெதழில் துறைகளையும் அனுமதிப்பதில்லை. உதாரணமாக போதைப் பொருள் உற்பத்தி . மோசமான உணர்வுகளை வெளிக்கொண்டு வரக் கூடிய இசைக் கருவிகள், புகைப்பட உற்பத்திகள், மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக கூடிய உற்பத்திகள் என்பவற்றைத் தடைசெய்துள்ளதைக் குறிப்பிடலாம். ஆகவே கைத்தொழில் முறை மூலம் பொருளிட்டுவதும் ஓர் இபாதத் என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருப்பத அவசியமாகும்.

**iii. உடை**

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

**iv. கூட்டுப் பொறுப்பு**

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**கேள்வி இல : 02**

**i. மஹப்பதுர் றசூல்**

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**ii. நாஸிக் மன்சூக்**

- நஸ்க் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. நீக்கல், பிரதி பன்னல், மாற்றல் எனப் பொருள்படும்.
- நாஸிக் - மாற்றியது ∴ புதிய சட்டம்
- முன்சூன் - மாற்றப்பட்டது ∴ பழைய சட்டம்
- ஆல்குர்ஆன், ஹதீஸில் இது இறைவனாலேயே மேற்கொள்ளப்பட்டது.
- நாஸிக் - மன்சூக் அறிவில்லாமல் மார்க்கத் தீர்ப்பு வழங்க தடை செய்யப்பட்டுள்ளது.
- ஆலி (ரழி) யின் சம்பவம்.
- முந்தைய வேதங்களிலும் இது பயன்பட்டது.
- இது நபியவரின் மரணத்தின் பின் இடம்பெறாது.

✓ நாஸிக் மன்சூக் இடம்பெற்றமைக்கான காரணங்கள்.

- மனிதர்களது இயல்புகள், தேவை, சூழ்நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு மனிதனுக்குரிய சட்டங்களை வழங்கினான்.
- விசுவாசுகளின் நன்மை வசதியை கருத்திற் கொண்டு இடம்பெறல்.
- ஆல்லாஹ்வின் ஏகத்துவத்தையும் அவனது வல்லமையையும் எடுத்துக் காட்டல்.

✓ நாஸிக் - மன்சூக் இடம்பெற்ற முறை ∴ வகை

- வசனமும் சட்டமும் மாற்றப்படல்
- சட்டம் அமுலில் இருக்க அதன் வசனம் மாற்றப்படுதல்.
- வசனம் அவ்வாறிருக்க சட்டம் மாற்றப்படல்.
- சட்டமும் வசனமும் முற்றாக நீக்கப்படுதல்.

✓ அல்குர்ஆன் வசனமொன்று இன்னொரு அல்குர்ஆன் வசனத்தால் மாற்றப்படுதல்

✓ அல்குரஆன் வசனத்தை சுன்னா மாற்றுதல்

✓ சுன்னாவை சுன்னா மாற்றுதல் ( கப்ரு0களை தரிசித்தல்)

gapw; pAk; Kaw; n tw;wpf; F t op

✓ இவற்றுக்கான குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள்

**iii. இல்ஹாத்தும் அதன் தாக்கமும்**

✓ இல்ஹாத் என்றால் என்ன

- நாஸ்தீகத்தைக் குறிக்கின்றது
- கடவுள் நம்பிக்கையை மறுப்பது அதாவது பிரபஞ்சம், படைப்பினம் இயற்கையானது என்று எண்ணல்.

✓ இல்ஹாத்தின் தோற்றம்

✓ இல்ஹாத் ஏற்படக் காரணம்

- கவனயீனம்
- அடுத்தவர் சொல்லுகின்ற கருத்து, ஆதாரத்தை ஆராயாமல் கண்மூடித்தனமாகப் பின்பற்றல்.
- வீண் அகங்காரமும், பிடிவாதமும்.

✓ நவின காலத்தில் அதன் தாக்கம்

**iv. தசவ்வுப் கலை**

........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**கேள்வி இல : 03**

**i.தலாக்**

........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................
........................................................................................................................

**ii. கழா கத்ர்**

✓ கழா கத்ர் என்பதன் விளக்கம்.

- கழா – படைத்தல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றல் அல்லாஹ் தன் அறிவு நாட்டத்திற்கு ஏற்ப பிரபஞ்சத்தையும் அதிலுள்ளவற்றையும் சிருஷ்டித்தான்.
- கத்ர் - நிர்ணயித்தல், முன்னேற்பாடு, அல்லாஹ்வின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் வகல விடயங்களும் நிகழ்வதற்கான காலஈ, நேர, இடம் பற்றிய நிர்ணயிப்பு ஆகும். பொதுவாக 02 யும் சேர்த்து விதி என்பவர்.
- இமாம் கஸ்ஸாலி அவர்களின் வரைவிலக்கணம்

gapw; rpAk; Kaw; rpAk; n tw;wpf; F t op

- ✓ கத்ரின் 4 கட்டங்கள்.
  - இல்முல்லாஹ் - அல்லாஹ்வின் அறிவு – 1ம் கட்டம்.
  - லுஹ்ஹுல் மஹ்ஹுல் - பாதுகாக்கப்பட்ட பலகை – 2ம் கட்டம்
  - இராததுல்லாஹ் - அல்லாஹ்வின் நாட்டம் - 3ம் கட்டம்
  - கத்ரதுல்லாஹ் - நாட்டம் செயலுறுப்பெறல் - 4ம் கட்டம்.

- ✓ கழா கத்ரின் வகைகள்
  - மனித சுதந்திரத்திற்கு உட்பட்டவை
  - மனித சுதந்திரத்திற்கு உட்படாதவை

கழா கத்ரும் செயல் சுதந்திரமும் பற்றி விளக்குக.

- ✓ அறிமுகம்
- ✓ தெரிவுச் சுதந்திரம்
- ✓ நன்மைக்கு நற்கூலியும் தீமைக்கு தண்டனையும்.
- ✓ அல்லாஹ்வின் தூதர்களையம் வேதங்களையும் அனுப்பியமை.
- ✓ ஓன்றை செய்வது ∴ விட்டுவிடுவது என்பது வெளி நிர்பந்தம் ஏதுமின்றி என்பதை அனைவரும் உணர்கின்றனர்.
- ✓ அல்லாஹ்வின் விரிந்த ஞானமும் நுணுக்கமான கணக்கெடுப்பும்
- ✓ இறைவன் நிர்ணயித்து வைத்துள்ளவை எமக்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளமை.
- ✓ அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் கழாகத்ர் பற்றிய கோட்பாடு

**iii.நோன்பு**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

**iv.பெண்கள்**

- வுரலாற்றில் இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்னர் பல்வேறு நாகரிகங்களிலும் சமயங்களிலும் பெண்கள் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தமை சுருக்கமாக விளக்கம்
- இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகளைப் பின்வருமாரு பட்டியற்படுத்தலாம்.

1. வாழும் உரிமை :-

"தரித்திரத்திற்காக உங்கள் குழந்தைகளை கொல்லாதீர்கள்" (6:151)

"கொலை செய்யக் கூடாதென்று அல்லாஹ் தடுத்துள்ள எந்த மனிதரையும் நியாயமின்றிக் கொலை செய்யாதீர்கள்" (6:151)

2. உயிரைப் பாதுகாக்கும் உரிமை :-

"எவனொருவன் மற்றொருவன் அநியாயமாகக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான். ஏவன் ஓர் உயிரை – ஆத்மாவை வாழ வைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவன் போலாவான்" (5:32)

3. கல்வியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை :-

"அறிவைத் தேடி பெறுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்" (அல்ஹதீஸ்)

4. பொது வாழ்வு, சகூகப் பணிகளில் பங்கேற்கும் உரிமை :-

gapv; rpA; Kaw;rpAk; ntw;wpf; F top

ஆயிஷா (ரழி) கற்பித்தல்
ரபீதா (ரழி) மருத்துவ உதவி
உம்மு அம்மாரா (ரழி) போராட்டம்
பின்து ஷியா (ரழி) – சந்தை மேற்பார்வை

5. நற்கூலி பெறும் உரிமை :-
“உங்களில் ஆணோ பெண்ணோ செய்த நன்மையை அவன் வீணாக்கி விடமாட்டான்” (3:195)

6. சமத்துவ உரிமை :-
“மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து தான் சிருஷ்டித்தோம்” (49:13)

7. கௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை :-
“விசுவாசிகளே எந்த ஆண்களும்.................. எந்த பெண்களும் மற்நெற்த பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம்” (49:11)

8. கருத்து வெளியிடும் உரிமை :-
“விசுவாசங் கொண்ட ஆண்களும் விசுவாசங் கொண்ட பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். ஆவர்கள் (ஒருவர் மற்றவரை நன்மை செய்யுமாரு தூண்டியும் பாவம் செய்யாது தடுத்தும் வருவர்” (9:71)

9. தனிப்பட்ட வாழ்வில் கண்ணியத்தைப் பாதுகாக்கும் உரிமை :-
“விசுவாசிகளே சந்தேகங்களிலிருந்து அனேகமானவற்றை நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்” (49:12)

10. நீதி கோரும் உரிமை :-
“விசுவாசிகளே! நீதத்தை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒருசாரார் மீதுள்ள துவேசம் (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கவும். (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். (5:8)

11. சொத்துரிமை, வாரிசுரிமை
வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமை

## பகுதி – ஐஐ

**கேள்வி இல : 04**

### i. இஃஜாசுல் குர்ஆன்

- அல்லாஹ் காலத்திற்கு காலம் றஸூலடமாரகளையும், நபிமார்களையும் அனுப்பி சமூகத்தை நேர்வழிப்படுத்தியள்ளான். ஒவவொரு நபிமாரும் தமது ஏகத்துவக் கொள்கையை முன்வைத்த வேளையில் யாருமே இலகுவான முறையில் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நபிமார்களை உறுதிப்படுத்தவும், அவர் நபி தான் என்பதை ஏற்றுக் கொள்ளவும் சில அற்புதங்களை செய்து காட்ட வேண்டிய நிலை கானப்பட்டது.
- இதனால் தான் பல றசூல்மார்களை அல்லாஹ் வேறுபட்ட அற்புதங்களுடன் அந்தந்த சமூகத்திற்கு ஏற்றவாறு அனுப்பிவைத்தான். சூனியம் நிறைந்த காலத்தில் சூனியத்தை மிகைக்கக்கூடிய அஸாக் கோளை மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கினான். அதே போல் சுலைமான் (அலை) அவர்களுக்கு உலகை ஆட்சி செய்யும் அதிகாரத்தையும் அனைத்து உயிரிணங்களோடும் பேசும் அற்புதத்தை கொடுத்ததோடு அவற்றை வசப்படுத்தியும் கொடுத்தான். நபி ஈஸா (அலை) அவர்களுக்கு மீண்டும் உயிர் பெற்று வரும் அற்புதத்தையும், தீராத நோயைக் குணப்படுத்தும் சக்தியையும் வழங்கினான். அந்த வகையில் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம் அல்குர்ஆனாகும்.
- அல்குர்ஆனின் அற்புதம் என்பது சாதாரணமானதல்ல. அது உயர்ந்த முறியடிக்க முடியாத பல்துறை சார்ந்த அற்புதங்களை உள்ளடக்கியதாகும். அவற்றை பின்வரும் தலைப்புக்களில் விளக்கலாம்.

1. மொழி ரீதியான அற்புதம் :
2. அற்புதத் தன்மைமிகு எதிர்வு கூறல்கள் :
3. அற்புதத் தன்மைமிகு விஞ்ஞான உண்மைகள்

1. இதுவரை மனித அறிவால் கண்டறியப்பட்டவை :
2. இன்று வரை அறிவியல் உலகம் புரிந்துகொள்ளாத அறிவியல் கருத்துக்கள்.

**4.** சட்டவியல் ரீதியான அற்புதம் :
1. தனிமனிதனுக்குரியவை
2. சமூகத்துக்குரியவை

**5.** நிலைத்திருக்கும் அற்புதம்
**6.** வரலாற்று ரீதியான அற்புதம்
**7.** மனதை மாற்றும் அற்புதம்
**8.** மனனமிடுவது இலகுவான அற்புதம்.

**ii. குர்ஆன் மீது எமக்குள்ள கடமைகள்.**

- அல்குர்ஆன் அல்லாஹ்வின் புறத்தில் இருந்து மனித சமூகத்துக்கு வழங்கப்பட்ட அவனது தெய்வீக வழிகாட்டலை கொண்ட ஒரு நோக்காகும். அதனை அருளியதன் நோக்கம் பற்றி அல்லாஹ் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.
- “நபியே அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆராய்வதற்காகவும் அதனைக் கொண்டு அறிவுடையோர் நல்லுணர்ச்சி பெறுவதற்காகவும் மிக்க பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை நாமே உம்மீது அருள்புரிந்தோம்” (ஸாத்:29)
- அல்குர்ஆனின் அனுகு முறையினை பின்வரும் இரு தலைப்புக்களில் நோக்கலாம்.

1. **உளரீதியானவை**
   1. ஈமான் (நம்பிக்கை கொள்ளல்)
   2. அத்தக்வா (பயபக்தி)
   3. பணிவு
   4. சிந்தனை (ததப்புர்)

2. **செயற்பாட்டு ரீதியானது**
   1. ஓதுதல், செவிமடுத்தல்
   2. அல்குர்ஆனை மனனமிடுதல்
   3. விளங்குதல்
   4. செயற்படுத்தல்
   5. அல்குர்ஆனின் தூதை எத்திவைத்தல்

## கேள்வி இல : 05

**i. மௌழூவான ஹதீஸ்களின் தோற்றமும் அவற்றை இனம் கானலும்**

போலி ஹதீஸ் பற்றிய அறிமுகம்

- அரசியற் காரணிகள்
  ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெறுவதற்காக போலி ஹதீஸ்கள் புனைந்துரைக்கப்பட்டமை.
  உதாரணம் - ஷியாக்களால் கூறப்பட்ட கருத்துக்கள்
- குழு, கோத்திர, பிரதேச உணர்வுகளை வலுப்படுத்தல்
  மு.ஃதஸிலா மற்றும் பக்தாத் பகுதியினர் தத்தம் சிறப்புக்களைக் கூறல்
- ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெறல்
  உதாரணம் - இயாழ் இப்னு இஸ்ஹாக் புறாக்களைப் பற்றி கூறல்
- நன்மையின் பக்கம் தூண்டல்
- பிரபல்ய நோக்கம்
- பிக்ஹு தொடர்பான கருத்து வேறுபாடு
- மத்ஹப், மொழி, இனம், நாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக இட்டுக்கட்டப்பட்டவை
- வியாபார ∴ சுயநல நோக்கில் கூறப்பட்டவை
- ஸீந்திக்களின் கூற்று
- இல்முகலாமில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள்
- உபதேசிகளும் கதை கூறுவோரும்
  - இஸ்னத், மதன் என்ற இரு வழிகளில் ஹதீஸ்களை ஆய்வு செய்தல்

gapw; rpAk; Kaw; rpAk; n tw;wpf; F t op

- ஆஸ்மா உர்ரிஜால் கலை
- இல்முல்ஜராஹ், வத்த.்.தீல்
- இஸ்னாதில் :-
  - ராவிகளையும் ராவித் தொடர்களையும் இனங்காணல்
  - ராவிகளைத் சந்தித்து அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்தல்
  - ராவிகளின் பண்புகளை வரையறுத்தல்
  - இஸ்மா உர்ரிஜால் பற்றிய தொகுப்பு
- மதனில் :-
  - மோழி நடை
  - குர்ஆனின் கருத்துக்களுக்கு ஒத்துச் செல்லல்
  - பகுத்தறிவுக்கு முரணின்றி அமைதல்
  - வரலாற்று உண்மைகளுக்கு மாற்றமாக அமையாதிருத்தல்
  - ஒழுக்க பண்புகளுக்கு மாற்றமாக அமையாதிருத்தல்
  - கொள்கை சார்பானோர் தமக்கு சாதகமாக அறிவித்திருப்பின் ஆழ்ந்து நோக்கப்பட்டமை
- விளைவுகள் :-
  - போலிகள் வேறாக தொகுக்கப்பட்டமை
  - ஹதீஸ் பகுப்பாய்வு விதிமுறைகள் வகுக்கப்பட்டமை
  - ஹதீஸ்கள் தரம் பிரிக்கப்பட்டமை
  - நூல் வடிவில் தொகுக்கப்பட்டமை

**ii. இஜ்மா அல்லது கியாஸ் பற்றி விளக்கி அது ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரத்தையும் விளக்குக**

- **பொருள்**
  - ஒப்பிடுதல் கணிப்பிடுதல் அனுமானித்தல் ஒற்றுமை காணல்
- **விளக்கம்**
  - இஸ்லாமிய சட்டக் கலை தொடர்பாக ஒரு பொருளில் அல்லது ஒரு விடயத்தில் எக்காரணத்திற்காக அச்சட்டம் ஏற்பட்டதோ அதே காரணி பிறிதொரு பொருளில் அல்லது ஒரு விடயத்தில் பெற்றுக் கொள்ளப்படுமாயின் முன்னையதிற்குரிய சட்டத் தீர்ப்பு பின்னையத்திற்கும் பொருந்தும் என்ற அடிப்படையில் ஒப்பு நோக்கிப் பெறப்படுகின்ற தீர்வாகும்.

**கியாஸின் அர்க்கான்கள்**

1. அல் அஸ்ல் - மூலம் அல்லது உவமேயம்
2. அல் பர்உ – கிளை அல்லது உவமானம் (புதிய பிரச்சினை)
3. அல் இல்லத் - காரணம் அல்லது பொதுத் தன்மை
4. அல் ஹுக்ம் - மூலத்திற்கான திர்ப்பு அல்லது சட்டம்

**சட்டவாக்கத்தில் அதன் பங்கு**

- கியாசின் தேவைக் கேட்ப தீர்வுகள் பெறக்கூடியதாக இருத்தல்
- ஸஹாபாக்கள் காலம் முதலே கியாஸ் கையாளப்பட்டிருத்தல்
- இஸ்லாத்திற்கு இயுக்க சக்தியை வழங்கதல்
- நவின காலப் பிரச்சினைகளை தீர்க்க உதவதல்
- சமூக வளர்ச்சிக்கு ஏற்ப சட்டங்களை ஆக்குவதற்கு துணையாகுதல்
- இஸ்லாம எல்லாக் காலத்திற்கம் பொருத்தமானது என் நிறுவுதல்
- இஜ்திஹாதில் அதன் பங்கு

gapw; rpAk; Kaw; rpAk; rtw;wpf; F top

## கேள்வி இல : 06

**i. கனவன் மனைவி அல்லது பெற்றார் பிள்ளைகள் உரிமை, கடமைகள் பற்றி விளக்குக**

ஆல்குர்ஆன் பல இடங்களில் வலியுறுத்துகின்றது

- பேற்றோர் முஸ்லிம்களாக இல்லாவிட்டாலும் உபகாரம் செய்ய வேண்டும்.
- சுன்னா ஆதாரங்கள்
- பேற்றோர் உயிருடன் இருக்கும் போது செய்ய வேண்டிய கடமைகள்

- ஆவர்களின் அழைப்புக்கு உடனடியாக பதில் கூறல்
- ஆன்புடன் நடந்து கொள்ளல்
- மனங்களை புண்படுத்தாமல் இருத்தல்
- பணிவாக நடத்தல்
- அவர்களுக்காக பிராத்தனை புரிதல்
- மற்றவர்கள் எம் பெற்றோரை திட்டும் விதமாக நடக்காதிருத்தல்
- விருப்பு வெறுப்புக்களை அறிந்து நடத்தல்

- தூய்மையான எண்ணம் (தனது குழந்தையை ஸாலிஹான குழந்தையாக வளர்ப்பேன் எனும் எண்ணம்)
- ஸாலிஹான குழந்தைக்காக அல்லாஹ்விடம் பிராத்திருத்தல்
- குழந்தையை கருவறையில் பராமரித்தல்
- குழந்தை பிறந்தவுடன் வலது காதில் அதான் இடது காதில் இகாமத்
- அகீதா கொடுத்தல்
- அழகிய பெயர் சூட்டல்
- ஏழாம் நாளில் தரை முடியை சிரைத்து அதன் நிறையளவு வெள்ளியின் பெறுமதியை தர்தம் செய்தல்
- குத்னா செய்தல்
- முதல் இரண்டு வருடங்களுக்கு தாய்பால் ஊட்டல்
- ஹலாலான உணவளித்தல்
- முார்க்க அடிப்படைகளை சொல்லிக் கொடுத்தல்
- தொழுகையை நிலைநாட்ட பயிற்றுவித்தல்
- விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- நல்ல நண்பர்களை தெரிவு செய்து கொடுத்தல்
- குழந்தைகள் மத்தியில் பாரபட்சம் இன்றி நடத்தல்
- உடை ஒழுங்குகளை ஏற்படுத்தல்
- பருவ வயதை அடைந்ததும் ஸாலிஹான துணையை மணமுடித்துக் கொடுத்தல்

**ii. பலதாரம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..............................................................................

**கேள்வி இல : 07**

**i. பள்ளிவாசல்கள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்**

- மஸ்ஜித் எனும் சொல் ஸுஜூத் எனும் சொல்லிருந்து உருவாகியது
- மஸ்ஜிதுகள் அல்லாஹ்வின் கட்டளைகளை செயற்படுத்துவதற்கும், நிலை நிறுத்துவதற்குமான மத்திய நிலையமாகும்.
- மஸ்ஜிதுகளின் புனிதத்துவம்
    1. பள்ளிவாசல் முஸ்லிம்களின் புனிதத்தலமாகும்.
    2. அழுக்குகளைக் கொண்டோ, ஷிர்க்கைக் கொண்டோ மஸ்ஜிதுகளை அசுத்தப்படுத்துவதை விட்டும் தூய்மைப்படுத்தல்.
    3. மஸ்ஜிதுகள் பக்தி பூர்வமானவையாகவும் எளிமைத் தோற்றம் கொண்டவையாகவும் அமையும்
    4. கபுறுகளுக்கு மேலால் மஸ்ஜிதுகள் அமைக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளமை.
    5. மஸ்ஜிதுகளில் வியாபார நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளமை

- மஸ்ஜிதின் முக்கியத்துவம் பற்றிய குர்ஆனும் சுன்னாவும்

gaw; rpAk; Kaw; rpAk; n tw;wpf; F top

1. அல் குர்ஆன் (9:18)
2. ''நகரங்களில் அல்லாஹ்விற்கு மிக விருப்பதற்குரிய இடம் அதனுடைய பள்ளிவாசல்களாகும். மிக வெறுப்பிற்குரிய இடம் அதனுடைய அங்காடிகளாகும்'' முஸ்லிம்

- நபி (ஸல்) அவர்களது காலத்து மஸ்ஜிதுகள் சமூகத்தின் மத்திய நிலையமாக நின்று பணியாற்றிய விதம்
  1. சமூக இணக்கப்பாட்டிற்கும், தொடர்பாடலுக்கும் உரிய இடம்
  2. இஸ்லாமிய பிரச்சார கேந்திர நிலையம்
  3. ஆன்மீக பயிற்ச்சிப் பாசறை
  4. அரச கருமபீடம்
  5. சமூக கலாசார மத்திய நிலையம்
  6. இஸ்லாமியக் கல்விக் கூடம்
  7. பொருளாதார கேந்திர நிலையம்
  8. இராணுவ மத்திய நிலையம்
  9. நீதிமன்றம்

- கலீபா உர்ராஷிதூன்கள் காலத்து மஸ்ஜிதுகள் மேற்குறித்த முறையில் பணியாற்றியதோடு பின்வரும் அடிப்படையில் செய்யப்பட்டது.
  1. கலீபாத் தெரிவும், பைஅத்தும் மஸ்ஜிதுகளில் இடம்பெற்றன
  2. ''மஜ்லிஷ் அஷ்ஷூரா'' ஆலோசனை சபை மஸ்ஜிதுகளில் இயக்கப்பட்டது.
  3. நீதிமன்றங்களாகப் பயன்படுத்தப்பட்டது
  4. பைதுல் மாலுக்குரிய செயற்பாடுகள் மஸ்ஜிதில் மேற்கொள்ளப்பட்டது.
- மஸ்ஜிதுகளின் இன்றைய நிலையும், அதற்கான காரணங்களையும் ஆராய்தல்
  1. வெறுமனே சில இபாதத்துகளை மாத்திரம் மேற்கொள்ளும் இடமாக மாறியுள்ளமை
  2. தகுதியான நிருவாகிகளை இமாம்களை மஸ்ஜிதுகள் கொண்டிருக்காமை
  3. மஸ்ஜிதுகளின் செயற்பாட்டிற்கான பொருத்தமான திட்டங்கள் இல்லாமை
- மஸ்ஜிதுகளின் வரலாற்று ரீதியான பங்களிப்பினை மனதிற்கொண்டு சம காலத்து மஸ்ஜிதுகளின் செயற்பாட்டினையும் பயன்பாட்டினையும் மேலோங்கச் செய்வதற்கான ஆலோசனைகளும் நடவடிக்கைகளும்

### ii. ஜீவகாருன்யம் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்

- உயிரினங்கள் அனைத்தும் இறைவனின் குடும்பம்
- இறைவனின் படைப்பாகிய ஏனைய ஜீவராசிகள் மீதும் அன்புடன் கருணையுடன் நடக்கப் பணிக்கின்றது.
- இஸ்லாத்தின் வருக்கைக்கு முன் அரேபியர்கள் மத்தியில் மிருகவதை மலிந்து காணப்பட்டது. ( அளவுக்கு அதிகமாக வேளை வாங்குதல், மோதவிட்டு வேடிக்கை பார்த்தல், ஓய்வு கொடுக்காதிருத்தல்,குறி பார்த்து அம்பு எய்தல்)
- ஜீவகாருண்யம் ஈமான் சார் அம்சம் ஆகையால் மீறுவது தண்டனைக்குரியது.
- இஸ்லாத்தின் வருகைக்குப் பின் மிருகங்களக்கு உரிமை, சிறப்பு வழங்கப்பட்டன.
- போர்க்களங்களில் மிருகங்களை அனாவசியமாக கொல்வது தடைசெய்யப்பட்டுள்ளது
- மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் பிரானிகளை மாத்திரமே கொல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தவளை, தேனி, போன்றவை கொல்லக் கூடாது என தடுக்கப்பட்டுள்ளது.
- அறுக்கும் பிரானிகளைக் கூட அறுக்கும் போது பல விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை.
- உயிர்ப்பிராணிகளை துன்புறுத்துவது இறைவனின் சபாத்தை தேடித் தருவதோடு மறமையில் குற்றவாளியாக எழுப்பப்படுவார்.
- இஸ்லாம் கூறும் உயிரினங்களடன் நடக்க வேண்டிய முறை ∴ இயல்பு
  - ✓ இரக்கம் காட்டுதல்
  - ✓ தீங்கிழைக்காதிருத்தல்
  - ✓ குறித்த உயிரினம் எதற்காகப் படைக்கப்பட்டுள்ளதோ அவ்வேலையை மட்டும் அதனிடம் இருந்து பெறல்.
  - ✓ ஓய்வளித்தல்.
  - ✓ சுண்டை சூட்டக் கூடாது, முகத்தில் அடிக்கக் கூடாது.
  - ✓ தீங்கிழைக்கும் பிராணிகள்
  - ✓ அறுவைப் பிராணிகள்

gapw; mpAk; Kaw; n tw;mpf; F top

- ✓ பிராணிகள் மனிதனோடு நெருங்கி வாழ்பவை எனவே அத்தகைய மிருகங்களுக்கு உரிய பாதுகாப்பும் முக்கியத்துவமும் அளிப்பது கடமை.
- ✓ பிராணிகளுக்கு கோபம், ஆசை முதலிய குணாதிசயம் உண்டு.
- ✓ மனிதன் அவற்றிலிருந்து தன் பொருளாதார தேவையை நிறைவேற்றுவது மட்டுமல்ல இரக்கம், பரிவு, அந்நியோன்யம் முதலியவற்றை தோற்றவிக்கும் பண்புகள் அவையிடம் உள்ளன. அவை அழகுணர்வையும் தோற்றவிக்கும்.

**கேள்வி இல : 08**

**i. மாற்று மதத்தவர்களுடனான உறவு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றி விளக்குக**

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………

**ii. ஜிஹாத் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்கி அது பற்றிய தப்பபிப்பிராயங்களைக் குறிப்பட்டு அவை பிழையானவை என்பதை நிறுவுக**

- ஜிஹாத் மொழிக் கருத்தும் வரைவிலக்கணமும் ஏதாவதொன்றை அடையும்நோக்குடன் முயற்சியைப் பிரயோகித்தல்
- "மக்கள் தாம் விரும்பிய மார்க்கத்தை தெரிவு செய்வதற்கெதிராக பிரயோகிக்கப்படும் அடக்கு முறையைத் தடுப்பதன் மூலம் இஸ்லாமிய த∴வாவைப் பாதுகாப்பதற்காகவும் ஒடுக்கப்படும் மக்களுக்கு உதவுவதற்காகவும், அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்துடன் அவன் காட்டிய வழி நின்று ஒரு முஸ்லிம் தன்னால் முடிந்தளவு தீனை மேலோங்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுதலே ஜிஹாத் ஆகும்"
- ஜிஹாத்துக்கான அல்குர்ஆன் - ஹதீஸ் ஆதாரங்கள் - (9:20), (9:30), (9:41), (9:111), (62:10), (8:45), (8:15), (9:123)
- நற்செயல்களில் சிறந்தது எது என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்ட போது"அல்லாஹ்வை நம்புவதும் அவன் பாதையில் ஜிஹாத் செய்வதுமாகும்" எனப் பதிலளித்தார்கள்
- ஜிஹாத் தொடர்பான தப்பிராயங்கள்
  புயங்கரவாதம் வன்முறை வாலால் இஸ்லாத்தைப் பரப்புதல், நாடு பிடித்தல், அடக்குமுறை அத்துமீறல்
- தப்பிராயங்களை நீக்குதல்
  1. உலகில் எந்தவொரு சமூகமும் யுத்தத்திற்கு விதிவிலக்காக இருந்திருக்காமை. துற்காலத்தில் யுத்தம் தொடர்பாக சர்வதேச விதிமுறைகள் வரையப்பட்டிருப்பதுடன் கருத்து முரண்பாடுகளின் போது சமரசம் ஏற்படாத போது யுத்தம் தவிர்க்க முடியாதது என்பதனை உறுதிப்படுத்துகின்றது
  2. பயங்கரவாதம் என்பது சர்வதேச ரீதியாகவோ அல்லது ஏதாவது நாட்டிலோ காணப்படும் ஒழுங்கிற்கு எதிராக சட்டபூர்வமற்ற முறையில் வன்முறையை பயன்படுத்தி கிளர்ச்சி செய்தல். இஸ்லாம் பயங்கரவாதம் வன்முறை என்பவற்றை அனுமதிப்பதில்லை. ஜிஹாத் வாழ்வை பாதுகாக்கும் பயங்கரவாதம் வாழ்வை அழிப்பதோடு சிவில் நிறுவனங்களையும் - அரசாங்கத்தையும் அழித்து விடும்.
  3. இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற யுத்தங்கள் தற்பாதுகாப்பு போர்களேயன்றி வாலால் அல்லது பலவந்தமாக இஸ்லாத்தை பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளன்று என்பதை யுத்தங்களுக்குரிய காரணங்கள் யுத்தங்கள் இடம்பெற்ற முறைகள் உறுதிப்படுத்துகின்றன.

4. வெற்றியின் பின்னர் மன்னிப்பு வழங்கியமை – கைதிகளை நடாத்திய விதம் - திம்மிகள் நடாத்தப்பட்ட விதம் இஸ்லாம் கூறும் ஜிஹாத் பயங்கரவாதமல்ல என்பதையும் நிலம் பிடிப்பதும் பழிவாங்ககுதலும் அதன் நோக்கமல்ல என்பதையும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.
5. முஸ்லிம்கள் நாடு பிடிக்கும் நோக்கில் கொள்கையடிக்கும் மதத்தை திணிக்கும் நோக்கில் ஜிஹாத் செய்திருந்தால் சென்ற இடங்களிலெல்லாம் அவர்கள் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.
6. இஸ்லாம் மனிதர்களை மனித நேயத்துடன்நோக்குகின்றது.
    - ஓர் ஆத்மாவிலிருந்து படைக்கப்பட்டவர்கள்
    - மனிதர்களுக்கு மத்தியில் வேறுபாடு காட்டாமை
    - சமூக நீதியைப் பேணுகின்றது
7. ஜிஹாத்தின் பல்வேறு வகைகளில் அறப்போர் என்பது ஒரு வகை என்பதும் நோக்கத்தக்கதாகும்.

**கேள்வி இல : 09**

**i.ஹறாம் ஹலால் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் பற்றி விளக்குக**

✓ ஷரீஆ அனுமதித்த அனைத்தும் ஹலால் ஆகும். தடுத்தவை அனைத்தும் ஹராம் எனப்படும்.

- அடிப்படையில் அனைத்தும் ஹலாலானவையே
- ஹலாலாக்குவதும் ஹராமாக்குவதும் இறைவனின் உரிமை
- ஹலாலை ஹராமாக்குவது, ஹராத்தை ஹலாலாக்குவது இணைவைத்தலுக்குச் சமம்
- தீங்கு விளைவிப்பவையே ஹராமாக்கப்பட்டுள்ளது
- ஹராத்துக்க பகரமானவை ஹலாலில் உண்டு
- ஹராத்துக்க வழிவகுப்பதும் ஹராம்
- தந்திரமான வழிகளில் ஹராத்தைச் செய்வதும் ஹராம்
- நல்லெண்ணம் ஹராத்தை நியாயப்படுத்தாது
- ஹராத்தில் வீழ்ந்து விடுவோம் எனும் பயத்தில் சந்தேகத்திற்கு இடமானவற்றை விலகியிருப்பது அவசியம்
- ஹராம் அனைவருக்கும் ஹராம்
- நிர்ப்பந்தம் தடுக்கப்பட்டவற்றை ஹலால் ஆக்கும்

**ii.பிரபஞ்சம் அல்லது மனிதன் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்.**

✓ பிரபஞ்சம் என்பதன் கருத்து
✓ மனித வாழ்வைப் புரிந்து கொள்ள பிரபஞ்சம் பற்றிய சரியான கண்ணோட்டம் அவசியம்
✓ பிரபஞ்சம் மனித வாழ்வுடன் தொடர்புடையது
✓ பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய கருத்துக்கள்
✓ பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ் (அத்தலாக் : 12)
✓ பிரபஞ்சம் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
✓ பிரபஞ்சம் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டிலுள்ளது
✓ பிரபஞ்சம் வீணாக படைக்கப்படவில்லை (ஆலு இம்ரான் : 191)
✓ பிரபஞ்சம் அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் இயங்குகின்றது (அல்கமர் - 49)
✓ பிரபஞ்சமும், அதிலுள்ளவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படி அழியும் (அர் ரஹ்மான் - 26)

**மனிதன் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்.**

✓ தனித்துவமான படைப்பு மூலத்தைக் கொண்டவன் (அல்லாஹ்வின் ரூஹ் ॱ மண்)
✓ கலீபத்துல்லாஹ் - இறைவனின் பிரதிநிதி
✓ படைப்புக்களில் தனித்துவமான சிறந்தவன் (95:4), (17:70)
✓ உடல், அறிவு, ஆன்மா பகுதிகளைக் கொண்டவன்
✓ தனது செயல்களுக்கு மறுமையில் பொறுப்புக் கூற வேண்டியவன்
✓ விருப்புத் தெரிவும் சிந்தனா சுதந்திரமும் கொண்டவன்
✓ கிலாபத், இபாபத், இமாரத் பணிகளை சுமந்தவன், மரணத்தை தழுவக் கூடியவன், சோதனைக்கு உட்பட்டவன்
✓ தெய்வீகத் தன்மை அற்றவன்
✓ உலகிலுள்ளவைகள் அனைத்தும் அவனுக்காகப் படைக்கப்பட்டு அவை வசப்படுத்தியும் கொடுக்கப்பட்டுள்ளன (31:20)

gapw; rpAk; Kawmpak; n tv;wpf; F top

- ✓ அவனது வாழ்வுக்கு உயர்ந்த நோக்கமும் குறிக்கோளும் உண்டு
    - ஏனைய கோட்பாடுகளுடன் ஒப்பிடுதல்

## கேள்வி இல : 10

### i. இஸ்லாம் அனுமதித்த பொருளாதார முறைகளை விளக்குக

- **முளாரபா**
- ஒரு சாரார் தேவையான நிதி மூலதனத்தை வழங்க இன்னுமோர் சாரார் மனித வளத்தை (உழைப்பை) வழங்கி ஒரு குறிப்பிட்ட பொருளாதார முயற்சியில் ஈடுபட்டு இலாபத்தில் பங்கு பெறும் ஒரு கூட்டு வியாபார அமைப்புக்களில் ஒன்றாகும்.
- கூட்டுப் பங்காண்மை எனவும் அழைக்கப்படும் இவ்வுழைப்பு நடவடிக்கை ஹலாலானதாகும்.

**நிபந்தனைகள்**

- மூலதனம் பணமாக அல்லது பணத்தின் பெறுமதியை வைத்து கணிக்குக் கூடியதாக இருத்தல்
- தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும்
- இலாப விகிதம் நிர்ணயிக்கப்படல்
- நட்டத்தை முதலீட்டாளர் ஏற்றல், உழைப்பாளியின் செயல்" முறையே நட்டத்திற்கு காரணம் எனின் அவரே ஏற்க வேண்டும்
- முழாரபா உடன்படிக்கை முறிவடையும் நிலமைகள்
- முழாரபா உழைப்பினால் கிடைக்கும் நன்மைகள்

- **இஜாரா**
    - வாடகைக்கு விடல் அல்லது கூலிக்கு விடல்
    - ஒரு நபரிடமிருந்து அல்லது ஒரு பொருளிலிருந்து பயன் பெறுவதற்காக குறித்த ஒரு தொகை பதலீடாகச் செலுத்துவதனைக் குறிக்கின்றது
    - உதாரணமாக ஒரு வாகனத்தை – கட்டத்தை – பொருளை வாடகைக்கு விடுவதைக் குறிக்கின்றது

நிபந்தனைகள்

- இரு தரப்பினரும் பருவ வயதை அடைந்தவராகவும் சித்த சுவாதீனமுள்ளவராகவும் இருத்தல்
- இரு சாராரும் திருப்தியுடன் உடன்படிக்கையை ஏற்றிருத்தல்
- வாடகைக்கு விடப்படும் பொருள் பற்றி அறிந்திருத்தல்
- வாடகைக்கு விடப்படும் பொருளை அதன் பயன்பாடு உள்ள நிலையில் கையளித்தல்
- வாடகைக்கு விடப்படும் பொருள் ஷரீஅத்தில் தடுக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது கொடுப்பதற்குகடமையாக்கப்பட்டதாகவோ இல்லாமல் இருத்தல்
- வாடகைப் பணம் பெறுமதியுடையதாகவும் தொகை அறியப்பட்டதாகவும் இருத்தல்

- **ஸலம்**
    - முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்
    - பொருளின் விலைக்குரிய பணத்தை வாங்குபவர் செலுத்தி விட விற்பனையாளர் காலம் தாழ்ந்தி பொருளை ஒப்படைத்தல் முறையில் இடம்பெறும் வியாபாரத்தைக் குறிக்கின்றது

நிபந்தனைகள்

- விலையாகச் செலுத்தும் பணத்தின் வகையும் தொகையும் அறியப்பட்டிருத்தல்
- விலைக்கான குறித்த தொகை உடன்படிக்கையின் போது செலுத்தப்படல்
- விற்பவரின் பொறுப்பில் பொருள் இருத்தல் வேண்டும்
- பொருளின் தரமும் தொகையும் விளக்கமாக குறிப்பிட்டப்பட்டிருத்தல்
- பொருளைக் கையளிக்கும் காலம் திகதி குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- **வதீஆ**
- நம்பிக்கை பொறுப்பு – ஒருவர் வேறொருவரிடம் பாதுகாப்பாக நம்பிக்கையாக வைக்கும் அவருக்குச் சொந்தமான பொருளைக் குறிக்கும். இது பொது வழக்கில் அமானிதப் பொருள் எனவும் அழைக்கப்படுகின்றது
- இவ்வாறு பொருட்களை வைப்புச் செய்வது ஆகுமானதாகும்

gapw; mAk; Kaw; mpAk; n tw,wpf; F to

- அமானிதப் பொருட்களை பாதுகாக்கும் தகுதி உள்ளவர்கள் அவற்றை ஏற்பது விருப்பதற்குரிய ஓர் அமலாகும்
- நம்பிக்கைப் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்த பொருட்களை உரியவராது அனுமதியுடன் அனுபவிக்கலாம்
- நம்பிக்கைப் பொறுப்பில் வைகப்பட்டிருந்த பொருட்களை அதன் உரிமையாளர்கள் திருப்தி கேட்கும் பொழுது அதனை ஒப்படைப்பது கடமையாகும்
- அமானிதப் பொருட்களை ஏற்ற பின் அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு கடமையாகும்

**ii. இமாம் முஸ்லிம் அல்லது இமாம் சாபிஈ அவர்களின் பங்களிப்புக்கள் பற்றி விளக்குக.**

- பிறப்பு – காஸாவில் ஹிஜ்ரி 150ல் பிறந்தார்கள்
- முழுப்பெயர் - முஹம்மத் பின் இத்தீஸ்
- கல்வி – மாலிக் இமாமிடம் கற்றல், 15ம் வயதில் பத்வாக் கொடுத்தல்
- இளமை – விவேகம் - 7 வயதில் ஹாபிழ் - 10ம் வயதில் முஅத்தாவை மனனிமிடல் - ஆசிரியருக்கு பணிவிடை செய்தல்
- இறப்பு - ஹிஜ்ரி 204 ல் எகிப்தில் மரணம்

**கல்விப் பங்களிப்பு**

- இலக்கியம் சார்பானது – பிரபல்யமான கவிஞர்
- மருத்துவம் சார்பானது
- எழுத்து துறை சார்பானது – 113 நூல்கள் அல் ரிஸாலா கிதாபுல் உம்மு பிரபல்யம்
- கற்பித்தல் சார்பானது - இமாம் ஹனபி இமாம் நபவி (ரஹ்) உருவாக்கம்
- கலாபீடம் சார்பானது – மக்காவில் கலாபீடம் அமைத்தல்

**சட்டக்கலைத் துறைப் பங்களிப்பு**

- உஸூலுல் பிக்ஹ் உருவாக்கம்
- அஹ்லுல் ஹதீஸ்களைச் சார்ந்த ஆராய்ச்சிகளும் பிரச்சினை தீர்த்தலும்
- ஜதீத் கதீம்களில் நெகிழ்ச்சியும் தாராளத் தன்மையுமான அணுகுமுறைகள்
- முஜ்தஹித் முத்லகாக இருந்து ஏனைய முஜ்தஹித்துகளில் தீர்வுகளுக்கு முடி சூட்டியமை
- சட்டத்துறை சார்பாக 14 நூல்கள் எழுதப்பட்டமை, அதில் 15 பாகங்கள் கொண்டது கிதாபுல் உம்மு

**மத்ஹப் தொடர்பான பங்களிப்பு**

- ஷாபி மத்ஹப் உருவானமை
- இன்று வரை பரந்து விரிந்து பின்பற்றப்படுகிறது – எகிப்து – எமன் - இந்தனோசியா
- ஆலிமுல் குறைஷ் என சிறப்பு பெறல்

gapw; rpAk; Kaw; rpA;n tw;wpf; F top

Prepared by :- ARM. JEMEEL

Vavuniya Zonal Education Office

Vavuniya south, vavuniya